# தமிழ் முரசு

தமிழ் முரசு

Thamil Murasu

நிகரென்று கொட்டு முரசே - இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்

மலர் : 1 இதழ் : 80 - 12.02.2023

## மதிசுதாவும் அவரது குறும்படங்களும்



## மலையக இளைஞர்களின் ‘சொல்லப்படாத கதை’

## ‘ஓசை’ மூலமாகவும் பேசப்படும் மூத்த இலக்கிய ஆளுமை மூதூர் முகைதீன்

## நிர்ஷ்ரயா கஜனின் பரத நாட்டிய அரங்கேற்றம்

தமிழ் முரசு
තමිල් මුරසු
Thamil Murasu
நிகரென்று கொட்டு முரசே - இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்

மின்னஞ்சல்: thamilanmurasu@gmail.com
தொலைபேசி: 0115 200 900/011 588 6187
விளம்பரம் : 0771721880

# மூன்று தசாப்தங்களை எட்டியுள்ள 'கலாபொல'

இலங்கையின் வருடாந்த திறந்தவெளி கலை கண்காட்சியான இலங்கை கலைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் கலாபொல எனும் கண்காட்சி, 30 வருடங்களாக இம்மாதம் பசுமை பாதை என அழைக்கப்படும் ஆனந்த குமாரசுவாமி மாவத்தையில் ஒரு பரவசமான சூழலில் கொண்டாடவுள்ளது.

மூன்றாவது தசாப்தத்தை தொடும் உலகப் புகழ்பெற்ற கலாபொல (Kalapola) திறந்தவெளி ஓவியக் கண்காட்சி இவ்வருடமும் நடைபெறவுள்ளது. 300இற்கும் மேற்பட்ட கலைஞர்களின் கைவண்ணங்கள் காட்சிப்படுப்படுத்தப்படவுள்ளன. கொழும்பு 7, ஆனந்தகுமாரசுவாமி மாவத்தையின் நடைபாதை ஓரங்களில் திறந்தவெளியில் நடைபெறும் இக்கண்காட்சியில் ஆயிரக்கணக்கான உள்ளூர், வெளிநாட்டு பார்வையாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி, அன்றைய நாள் முழுவதும் தொடர்ந்து இடம்பெறும். நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்கள், உலகின் பல பாகங்களிலும் இருந்துவரும் உல்லாசப் பிரயாணிகள் என பலரும் இக்கண்காட்சியை பார்வையிட்டு, குதூகலம் நிறைந்த அந்தச் சூழலில் கிடைக்கக்கூடியதாகவுள்ள இலங்கையின் பல வகையான ஓவியங்களை அவர்கள் கொள்வனவும் செய்யக்கூடியதாகவே இருக்கும்.

ஜோன்கீல்ஸ் குழுமத்துடன் ஒன்றிணைந்து ஜோர்ஜ்கீல்ஸ் மன்றத்தினால் வருடாந்தம் கலாபொல கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுவருகின்றது.

1993ஆம் ஆண்டு ஜோர்ஜ் கீட் அறக்கட்டளையால் (GKF) கருத்துருவாக்கம் செய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்டு மற்றும் 1994ஆம் ஆண்டுமுதல் ஜோன்கீல்ஸ் குழுமத்தின் இடைவிடாத அனுசரணையால் வளர்க்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் பார்வையாளர்களின் அனுபவத்தை உயர்த்துவதற்கும், மேலும் கலைஞர்களை உள்ளடக்கி அதிக பார்வையாளர்களை ஈர்ப்பதற்கும் கலைஞர்களுக்கு போதிய வருமானத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடியதுமாக இக்காட்சி அமைகின்றது.

இலங்கையின் பல்லின மக்கள் வாழும் சமூகங்களுக்கிடையில் ஓர் ஒருமைப்பாட்டை இன பேதமற்ற நிலைமையை உருவாக்குகின்றது. இது கலைஞர்கள் தமக்கிடையே உரையாடல்களை மேற்கொள்ளவும் எண்ணங்களை பகிர்ந்துகொள்ளவும் இடமளிக்கின்ற அதேநேரத்தில் கலைப்படைப்புகளை நேசிக்கின்ற மக்கள் பழைய மற்றும் புதிய படைப்புகளின் மாதிரிகளை கண்டறிந்துகொள்வதற்கான வாய்ப்பையும் வழங்குகின்றது.

பல்வேறு கலைஞர்களுக்கு தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் தொழிலை மேற்கொள்வதற்கான ஆரம்பமாக இக்கண்காட்சி திகழ்கின்றது.

இலங்கையின் கலை மற்றும் கலாசாரத்தை மேம்படுத்து வதற்கும் வளர்ப்பதற்குமாக மூன்று தசாப்த காலமாக இடம்பெறுகின்றது. இன மத பேதமின்றி தகுதியான படைப்பாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டே தேர்ந்தெடுக்கப்பட்டு இக்கண்காட்சிக்கான இறுதி கண்காட்சியிலும் பங்குபெறும் நிலைமையை இந்த திறந்தவெளி கண்காட்சி ஏற்படுத்துகின்றது.

இக்கண்காட்சி நூற்றாண்டு விழா காண வேண்டும் என 'தமிழ் முரசு' வாழ்த்துகிறது. அதேவேளை, சகல கலைஞர்களும் தமக்கான சிறந்த களத்தையும் இதனூடாக பெற்றுக் கொள்ளுமாறும் வேண்டுகின்றது.

# நடன மார்க்கத்தில் சிலப்பதிகாரம்




கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினால் நடத்தப்படும் 'இலக்கியக்களம்' நிகழ்வில் 369ஆவது நிகழ்வு கடந்த 05.02.2023 அன்று மாலை 5.30 மணிக்கு இடம்பெற்றது. இந்நிகழ்வின் உரைஞராக கலாசூரி திவ்யா சுஜேன் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

அன்றைய நிகழ்விற்கான தலைமையை சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா ஏற்று உரைஞரை அறிமுகப்படுத்தினார். சுகந்தி இராஜகுலேந்திரா தமிழ்ச் சங்கத்தோடு பல தசாப்தங்களாக இணைந்து செயற்படுவதுடன், கலை, இலக்கிய நிகழ்வுகள் பலவற்றையும் ஒருங்கிணைத்து வழங்கித் தமிழ்த் தொண்டாற்றி வருகிறார். அந்தவகையில் உரைஞருக்கான அறிமுகத்தையும் தலைமை உரையையும் நிகழ்த்தினார்.

''பத்தாண்டுகளுக்கும் மேலாக கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் அனைத்து விண்ணப்பங்களுக்கும் மறுக்காது நிகழ்வுகளைத் தருவதோடு, கலைத் துறையில் மட்டுமல்லாது, இலக்கியத் துறையிலும் அதிக நாட்டம் கொண்ட அபிநயஷேத்ரா நடனப்பள்ளி இயக்குனரும் உலக இலங்கை பரதநாட்டியக் கலைஞர்கள் சங்க அமைப்பாளருமான திவ்யா சுஜேனுக்கு அறிமுகம் தேவையில்லை. இருப்பினும், தொடர்ந்து பல ஆய்வுகளை மேற்கொண்டு கருப்பொருளுடன் கூடிய அரங்கேற்றங்களை மேடையேற்றி புதுமை சேர்த்து வருகிறார்'' என அறிமுகப்படுத்தினார்.

**திவ்யா சுஜேனின் உரைத் தொகுப்பு**

நாட்டிய மார்க்கத்தில் சிலப்பதிகாரம் என்று எடுத்துக்கொண்ட தலைப்பிற்கான அறிமுகத்தை முதலில் வழங்கினார். அதில் 'மார்க்கம்' என்பதை மையமாகக்கொண்டு மார்க்கம் என்பதை புரிந்துகொள்ள நாட்டியத்தில் அடிப்படையாக தெரியவேண்டிய நாட்டியத்தின் உட்பிரிவுகளை குறிப்பிட்டார்.

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்...)

# 'தேசிய இளைஞர் திரைப்பட விழா'

## இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்

**இளம் திரைப்படத் தயாரிப்பாளர்கள் தங்கள் படைப்புகளை இணைய வழியூடாகச் (ஒன்லைனில்) சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதோடு, திரைப்படங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி 2023 மே 23ஆம் திகதியுடன் நிறைவடைகிறது.**

ஆவது தேசிய சுதந்திர தின கொண்டாட்டத்துடன் இணைந்ததாக இளம் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு தேசிய தளத்தை உருவாக்கும் நோக்குடன் தேசிய இளைஞர் திரைப்பட விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தியலான தேசிய இளைஞர் தளத்தின் கீழ் இந்த வேலைத்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.

'எமது புதிய கதை' என்ற தொனிப் பொருளின் கீழ் இந்த 'தேசிய இளைஞர் திரைப்பட விழா' ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது.

பாடசாலை மாணவர்களையும் இளைஞர் சமூகத்தையும் திரைப்படத்துறை பிரவேசத்திற்குள் ஊக்குவித்தல், பாடசாலை மாணவர்களுக்கு திரைப்படத்துறை பற்றிய கலைத்துவமான மற்றும் தொழில்நுட்ப ரீதியான அறிவை வழங்குதல்,

இலங்கைத் திரைப்படத்துறைக்கு மிகவும் கவர்ச்சிகரமான மற்றும் புதுப்பிக்கப்பட்ட போக்கை வழங்குதல் மற்றும் இலங்கை சினிமா ரசிகர்களுக்கு 'எங்கள் புதிய கதைகள்' கொண்ட சினிமாவை வழங்குவது என்பன இச் செயற்றிட்டத்தின் நோக்கமாகும்.

இத்திரைப்பட விழாவுடன் இணைந்து தேசிய இளைஞர் குறும்படப் போட்டியும் நடைபெறவுள்ளது. பாடசாலைகள் மற்றும் 18-27 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என இரு பிரிவுகளாக போட்டி நடத்தப்படும். இப்போட்டிக்கான குறும்படங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை பெப்ரவரி 20ஆம் திகதிமுதல் ஆரம்பமாகும்.

இளம் திரைப்படத் தயாரிப்பாளர்கள் தங்கள் படைப்புகளை இணையவழியூடாகச் (ஒன்லைனில்) சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதோடு, திரைப்படங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 2023 மே 23ஆம் திகதியுடன் நிறைவடைகிறது.

இந்தப் போட்டி தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் 'தேசிய இளைஞர் தளம்'இணையதளம் மற்றும் ஊடகங்களில் விரைவில் வெளியிடப்படும்.

போட்டியாளர்கள் தயாரிக்கும் குறும்படங்கள் புதிய தலைமுறையைச் சேர்ந்த திரைப்பட தயாரிப்பாளர்களால் மதிப்பிடப்படும்.

குறும்படங்கள் மற்றும் வெளிநாட்டுத் திரைப்படங்களின் கண்காட்சி, குழு கலந்துரையாடல்கள், Masterclass நிகழ்ச்சிகள் மற்றும் விருது வழங்கும் விழா ஆகியவை இந்தத் திட்டத்தில் அடங்கும்.

திரைப்பட இயக்குனர் மஹேல ஹெட்டியாராச்சி தேசிய ஒருங்கிணைப்பாளராக செயற்படுகின்றார்.

இளம் திரைப்பட தயாரிப்பாளர்களுக்கான இந்த நிகழ்ச்சி ஆண்டுதோறும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இளைஞர்களின் கனவை நனவாக்கும் பயணத்தில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் உட்பட அனைவரும் சாதகமான பங்களிப்பை வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இடர்கால இலக்கியங்கள்

## ஆகாரமே ஆதாரம்

மனித வாழ்வுக்கு அவசியமானது உணவு. வைத்திய கலாநிதி சுதர்மன் அவர்கள் அது தொடர்பாகத் தன் பார்வையில் பட்ட விடயங்களைத் தொகுத்து 'ஆகாரமே ஆதாரம்' என்ற தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டிருக்கிறார். இந்நூலின் முதற் பதிப்பு 2021 இல் வெளியிடப்பட்டது. இன்றும் பலரின் தேடல் பட்டியலில் அந்நூல் உண்டு. அதுவே சுதர்மனின் திறமைக்குச் சன்றாகின்றது. சில தினங்களுக்கு முன்னர் வட்ஸ்அப்பில் அந்நூல் பற்றிய சிறு குறிப்பு ஒன்றைப் பின்வருமாறு கண்டேன்.

எமது பாரம்பரிய உணவுப்பழக்கமானது ஆரோக்கியத்துக்கான முற்பாதுகாப்பினையே (Preventive care) அடிப்படையாகக் கொண்டது. இலங்கையைப் பொறுத்தளவில் கீரைவகைகள், இலைவகைகள் தாராளமாகக் கிடைக்கக்கூடியனவாக இருப்பதுடன், பணமின்றிப் பெறக் கூடியவையாகவும் இருக்கின்றன. ஆனால், அவற்றைப் பயன்படுத்துவதில் மக்கள் ஆர்வம் காட்டுவதில்லை. அதனால் பல்வேறு ஊட்டச்சத்துக் குறைபாடுகளையும், நோய்களையும் எதிர்கொண்டு வருகின்றனர் - யாழ்ப்பாண பாரம்பரிய உணவில் கீரை, இலைவகைகள் – பகுதி 1 'மாறுபாடில்லா உண்டி' Dr. தியாகராஜா. சுதர்மன்.

இன்று எம்மில் பலர் சுவைத்து உண்ணும் உணவான "கொத்து ரொட்டி" என்ற துரித உணவில் சேர்க்கப்படுக்கின்ற அஜினோமோட்டோ என்ற சுவையூட்டி உப்பு பற்றி அந்நூலில் குறிப்பொன்றுள்ளது. அதனைச் சீனர்களே அதிகம் பயன்படுதுகிறார்கள். ஆனால், பண்டைய காலங்களில் அது ஒரு வகைக் கடல் தாவரத்திலிருந்து பெறப்பட்ட இயற்கையான ஒன்று எனச் சொல்லப்பட்டாலும் காலப்போக்கில வணிக இலாப நோக்கில் செயற்கையாகத் தயாரிக்கப்பட்டே சந்தைப்படுத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதுவே தற்போது கூடாத பக்க விளைவுகளைத் தோற்றுவிப்பதாகவும் அஞ்சப்படுகிறது.

அஜினோமோட்டோ - AJI-NO-MOTO, an MSG (monosodium glutamate) உணவுப்பொருட்களுக்கு சுவையூட் டியாகப் பயன்படுவது. சீனாவிலேயே முதல்முதலில் பயன்படுத்தப்பட்டு வந்தது.

இது ஒரு சுவையூட்டியாக அங்கீகரிகப்பட்டிருந்தாலும், சில உடல் நலத்துக்கு எதிரான விளைவுகளையும் ஏற்படுத்துகிறது. பொதுவா அதிலுள்ள குளுராமேற் ஆனது வெவ்வேறு வடிவங்களில் இயற்கையாகவே உணவுகளில் காணப்படுகிறது. தாய்பாலில் கூட அது உண்டு. இந்தச் சுவையூட்டியான அஜினோமோட்டோவை எடுப்பதனால் ஏற்படும் சுகாதார அசௌகரியங்களை 'சைனிஸ் றெஸ்ரோன்ற் சின்றொம்' என அழைக்கிறார்கள்.

தலைவலி, உடற் சூடு அல்லது எரிவு, வியர்வை, முகத்தில் இறுக்கம் அல்லது அழுத்தம் காணல், முகம், கழுத்துபோன்ற இடங்களில் விறைப்பு, கூச்ச உணர்வு அல்லது எரிவு காணப்படல்.

இதயப் படபடப்பு, ஓங்காளம், பலவீனம் போன்ற உபத்திரவங்கள் இருப்பின் அஜினோமோட்டோவைத் தவிர்ப்பது நல்லது. உணவுச் சேர்க்கைகளைப் பொறுத்தவரையில் அளவுகளும், பாவனை முறைகளும், உடல் நலத்துக்கு முக்கியமானவைகளாக அமைகின்றன. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்று சொல்வர். – என்ற குறிப்பும் அந்நூலில் உண்டு.

பொன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட வைத்திய கலாநிதி தியாகராஜா சுதர்மன் தனது ஆரம்பக் கல்வியை பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையிலும், உயர் கல்வியை விக்ரோறியா கல்லூரியிலும், சித்த மருத்துவப் பட்டப்படிப்பைக் கைதடி யாழ்.பல்கலைக் கழகச் சித்த மருத்துவத் துறையிலும், உளவளத்துணை டிப்ளோமா கற்கை நெறியினை இலங்கை தேசிய சமூக அபிவிருத்து நிறுவனத்திலும், உணவும் போசாக்கும் - டிப்ளோமா கற்கை நெறியினை பெரதெனியா பல்கலைக் கழக விவசாய கற்கைகள் நிறுவனத்திலும் பூர்த்தி செய்துள்ளார்.

2005 ஆம் ஆண்டு யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் தனது முதல் நியமனத்தைத் திருகோணமலை மாவட்டத்தில் பெற்று 2012 வரை அங்கேயே தமது கடமையைச் செய்தார். அதனைத் தொடர்ந்து 2017 வரை ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள இலவச சித்த மருந்தகத்திலும் அதனைத் தொடர்ந்து இலவச சித்த மருந்தகத்தின் யாழ்.மாகர சபை நகரக் கிளையிலும் பணியாற்றி வருகிறார். – என மருதனார்மடத்தில் அமைந்துள்ள இராமநாதன் கல்லூரியில் ஆசிரியையாகக் கடமையாற்றும் திருமதி.கனிமொழி சிவரூபன் புகழ்மாலை சூட்டியிருக்கிறார்.

அந்நூலைப் பற்றி ஆசிரியர் சுதர்மன் குறிப்பிடும்போது, "இந்நூலை தமிழ் தெரிந்த அனைவரும் வாசித்துப் பயனடைய வேண்டும் என்பது என் அவா. உணவு தொடர்பாக ஓர் அறிமுகமாக எழுதப்பட்டது. எனினும் துறைசார் சொற்பதங்கள் சில வேளைகளில் விளக்கமின்மையைத் தரலாம். தமிழர்கள் நாகரிகத்தில், கல்வியறிவில் உச்ச நிலையில் இருந்தவர்கள்.

அறுபத்து நான்கு கலைகளைக் கொண்டவர்களாகத் திகழ்ந்த எமது இனம் இன்று அவற்றுள் பலவற்றைத் மெல்ல மெல்லத் தொலைத்து வருகிறோம்.

அந்தவகையில் நாம் மீள உயர வேண்டும் என்ற சிந்தனையில், இயன்றவரை அனைவருக்கும் விளங்கும் வகையில், எனது தமிழ் அறிவுக்கு எட்டியவரையில் இப் புத்தகத்தைத் தொகுத்துள்ளேன்.

இயன்றவரை தமிழ் சொற்பதங்களைப் பயன்படுத்தி யுள்ளபோதும் ஏற்கனவே தமிழ் மொழியுடன் கலந்து நிற்கும் சில வடமொழிச் சொற்பதங்களையும் தவிர்க்க முடியாது பயன்படுத்தி உள்ளேன்.

ஏனெனில் பயன்பாட்டில் உள்ள வடமொழிச் சொற்களை நீக்கி முழுமையாகத் தமிழை உட்புகுத்தும்போது, மேலும் இப் புத்தகம் கடுமையாகிவிடும் என்ற எண்ணத்தினாலாகும். அதே போல் நவீன உணவு விஞ்ஞானக் கருத்துக்களை உள்வாங்கியதுக்கமைய, நான் இதுவரைகாலமும் பெற்றுக்கொண்ட அறிவுக்கும், அனுபவத்துக்கும் அமைய ஒப்பீடும் செய்துள்ளேன். அதேபோலத் தற்காலத்துக்கும் ஏற்ப மாறுபடக் கூடிய விடயங்களையும் ஆய்வுக்குரிய விடயங்களாகக் குறிப்பிட்டுள்ளேன்.

இப் புத்தகத்தை விளங்கிக்கொண்டால் உணவில் நமது பாராம்பரியம், நமது மருத்துவம், என்பன பற்றியும் அவற்றின் சிறப்புகள் பற்றியும் நன்றாக விளங்கிக் கொள்ள முடியும் என நம்புகிறேன் – தன்னுரையிலே அந்நூலுக்கான விளக்கதை இப்படியாக சுதர்மன் தந்திருக்கிறார்.

மொத்தத்தில் சுகவாழ்க்கைக்கு, இந்நூல் பலவழிகளில் உதவும் என்பது எனது வாசிப்பு அனுபவம்.

**கணபதி சர்வானந்தா**

## நடன மார்க்கத்தில்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின்னர் 'மார்க்கம்' என்ற சொல்லாடலின் பொருள், அதன் மரபு, வரலாறு என்பவற்றைக் குறிப்பிட்டு நாட்டியமேதை பாலசரஸ்வதி அம்மா கோவில் அமைப்பு முறையுடன் நாட்டியக் கச்சேரியை ஒப்பிட்டுக் கூறிய நுட்பத்தினூடாக நாட்டிய மார்க்கம் என்பதை மேலும் இலகுவாகப் புரிய வைத்தார்.

சிலப்பதிகாரத்தில் எவ்வாறான ஆடல்முறை இருந்தது என்பது இன்றைய பேசுபொருள் அல்ல. சிலப்பதிகாரத்தில் 'நாட்டிய மார்க்கம்' என்று கூறுவது ஆய்வு முரண். 'மார்க்கம்' என்ற சொல்லாடல் சிலப்பதிகார காலத்திற்கு மிகவும் பிற்பட்டது.

ஆகவே, எடுத்துக்கொண்ட தலைப்பு இன்றைய நாட்டியக் கச்சேரி மார்க்கத்துக்குள் எவ்வாறு தொன்மை வாய்ந்த சிலப்பதிகாரத்தை உள்வாங்கிக் கொள்ளலாம் என்பதே என்று தெளிவுபடுத்தினார்.

அந்தவகையில் நாட்டிய மார்க்க உருப்படிகளான புஷ்பாஞ்சலி முதல் தில்லானா வரை உள்ள உருப்படிகளுக்குள் சிலப்பதிகாரத்திலுள்ள பாடல்களையும் செய்திகளையும் எவ்வாறு உள்வாங்கலாம் என்பதைப் பட்டியலிட்டுத் தெரிவித்து வர்ணம் என்னும் பிரதான உருப்படியை விரிவாக உரையாடினார். அபிநயஷேத்திராவின் படைப்பான 'நிறை ஓதம் நீர் நின்று' என்ற ஐம்பெரும் காப்பிய மார்க்கத்தில் சிலப்பதிகார வர்ணத்தைக் கையாண்ட விதமும் அதிலுள்ள ஜதிகளுக்குள் பொருத்தமாக அமைத்த சொற்கட்டுகள் பற்றியும் மாதவி ஆடிய ஜதி பற்றியும் விளக்கி ஜதிக்கட்டுகளை சொல்லியும் காட்டினார்.




இவ்வர்ணத்தை மகாகவி சுப்ரமணிய பாரதியின் கொள்ளுப்பேரன் டொக்டர் ராஜ்குமார் பாரதி அமைத்து தந்ததாகக் குறிப்பிட்டு மாதவி ஜதி சொற்கட்டுகளை வழங்கிய பேராசிரியர் மௌனகுருவுக்கு நன்றிகளைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பேராசிரியர் மௌனகுரு, மருத்துவ கலாநிதி ஞானசேகரன், மதுசூதனன், ரகுபதி பாலஸ்ரீதரன், த.ராஜரத்தினம் உள்ளிட்ட பல இலக்கிய அறிஞர்கள் இணைந்திருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மதிசுதாவும் அவரது குறும்படங்களும்

## ஒரு பார்வை



தமிழ் ஈழத் திரையுலகின் முக்கியமான முகங்களுள் ஒன்றாகத் திகழும் இவர், தனது குறும்படங்கள் மற்றும் ஆவணப் படங்கள் மூலம் ஈழத்தின் வாழ்வியலை, போராட்டக்களத்தை, போர் வன்முறைகளை, ஈழம் இழந்த அடையாளங்களைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

கலையெனும் ஆயுதத்தால் மட்டுமே மனிதனின் உடலை, மூளையை மீறிச் சென்று அவனது உணர்வுகளைத் துளைக்க இயலும் என்ற கருத்துக்கேற்ப தனது படைப் புகளின் மூலம் தமிழினத்தின் அடையாளமான ஈழத்தின் பெயரை உலக அரங்குகளில் ஓங்கி ஒலிக்கச் செய்து வருகிறார் மதிசுதா.

ஆவணப் படங்களின் வருகைக்குப் பிறகு தமிழுல கில் மிக அதிகமாக ஆவணப் படுத்தப்படுவது ஈழத்தமிழர் களின் வாழ்வும் அவர்களது போராட்டங்களும்தான்.

‘ஆவணப்படங்களே அடுத்த தலைமுறைக்கான வரலாற்றுப் பெட்டகம்’ என்னும் ஆய்வாளர்களின் கருத்தை உறுதிசெய்யும் விதத்தில், மதிசுதாவின் குறும்படங்கள் வரலாற்று ஆவணங்களாகும். புனைவுகளில் வருவதுபோல் எந்த மிகைப்படுத்துதலுமின்றி உண்மையை உரக்கக் கூறுவதால் மட்டுமே வரலாறு களங்கப்படாமலிருக்கும். அடுத்த தலைமுறைக்கு உண்மை தெரிய வேண்டுமென்றால் இத்தகு முயற்சிகள் அவசியம். அந்த விதத்தில் மதிசுதா போன்றோரின் முயற்சிகள் மெச்சுதற்குரியவை.

புரட்சியும் மறுமலர்ச்சியும் உணர் வுகளுக்கு அப்பாற்பட்டவை என்றாலும், அவை விளையும் இடம் ஏதோவொரு தீவிர உணர்வின் மடியில்தான். கலையும் அப்படித்தான் உயிர்பெறுகிறது. அதனால்தான் கலை கொண்டு புரட்சிகளை அரங்கேற்றுவது சாத்தியமாகிறது.

மதிசுதாவின் வலைப்பக்கமான ‘மதியோடை’ க்குள் நுழைந்து அவரின் பதிவுகளை வாசிக்கத் தொடங்கினால் நேரம் போவதே தெரிவதில்லை. ஒரு கலைஞனின் அறிவு வேட்கை, அவனது மன உளைச்சல், அவன் சந்திக்கும் அவ மானங்கள் என அனைத்தையும் தனது பதிவுகளின் மூலமாக மதிசுதா வெளிப்படுத்தியிருப்பதைக் காண முடியும்.

‘‘குறும்படங்கள் தயாரிப்பதற்கு பொருட்செலவும் தயாரிப்பு நிறுவனங்கள் தரும் நெருக்கடிகளும் அதிகமிருக்கும் சூழலில், ஒரு கைபேசியும் தேர்ந்த படத்தொகுப் பாளரும் இருந்தால் போதும். நாம் நினைத்ததைத் திரையில் கொண்டுவர முடியும், அதை உலகம் காண வும் செய்ய முடியும்’’ என்கிறார் மதிசுதா. அவரின் பெரும்பாலான குறும்படங்களும் ஆவணப்படங் களும் கைபேசியில் படமாக்கப்பட் டவை என்பதை அறியும்போது வியப்பு மேலிடுகிறது.

பாதுகை, தாத்தா, ரொக்கெட் ராஜா, துலைக்கோ போறியள், மிச்சக்காசு, வெடிமணியமும் இடியன் துவக்கும், வெந்து தணிந்தது காடு ஆகிய குறும் படங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் தனிச்சிறப்பு மிக்கவை.

இந்த உலகுக்குச் சொல்லவேண்டிய ஆயிரம் கதைகள் எம்மிடம் உள்ளன என்பதை எவராலும் மறுக்க முடி யாது. அதைச் சொல்ல தனி ஒருவனி டம் அதற்கான பண முதலீடு இல்லை.

எமக்கு ஏன் சினிமா தேவை?

எம்மிடம் உள்ள வாழ்வியல், பேச்சுமொழி, பண்பாடு என்பவற்றை நாம் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகிறோம். இதை இன்னொரு சந்ததிக்குக் கடத்தவோ அல்லது எம் வாழ்வியலை இன்னொரு சமூகத் தக்குக் காட்டவோ எம்மிடம் இருக் கும் ஒரே ஓர் ஆயுதம் சினிமா மட்டும்தான். எமக்கிருக்கும் பிரச்சினை இங்கு தயாரிப்பாளர்கள் இல்லாமையே. உங்களது 10 டொலரால் அல்லது 1,000 ரூபாவால் ஓர் இனத்தின் சினிமா கட்டமைக்கப் படுமென்றால், ஏன் இந்த முயற்சியை ஒரு சில நிமிடங்கள் செலவளித்துப் படித்துப் பார்க்கக் கூடாது என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தும் அதே சமயத்தில் மதிசுதா கையிலிருக்கும் கைபேசியிலேயே படம்பிடித்துத் தனது குறும்படங்களை உலகத்தின் பார்வைக்குக் கொண்டு செல்கிறார்.

ரொக்கெட் ராஜா, துலைக்கோ போறியள், மிச்சக்காசு, வெடிமணிய மும் இடியன் துவக்கும் ஆகியவை எனக்கு மிகவும் பிடித்த, என் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய படங் களாகும். ஆழமான உணர்வுகளை உணர்வுபூர்வமான காட்சிகள் மூலம் மட்டுமே வெளிப்படுத்த முடியுமென்கிற பொதுக்கருத்தை உடைத்து, அவரின் அனைத்துப் படைப்புகளிலும் நகைச்சுவை யுணர்வைத் திறம்படக் கையாள்வது மதிசுதாவின் சிறப்பம்சமாகும்.

அவரின் குறும்படங்கள் satire என்கிற எள்ளல் ரசம் மிகுந்து நகைச் சுவையாகவே மனிதனை சிந்திக்க வைக்கும் வல்லமை பெற்றவையாக இருப்பதைப் பார்க்க முடியும்.

‘வெடிமணியமும் இடியன் துவக்கும்’ என் மனதில் ஏற்படுத்திய தாக்கம் வடிய சில நாட்களாகின என்றே கூற வேண்டும். எத்தனை முறை அப்படத்தைக் கண்டிருப்பேன் என்று கணக்குத் தெரியாத அளவுக்கு அப்படம் எனக்குப் பழக்கம். ஈழ மக்களின் வாழ்வியல், வீரம், வேட்டையாடுவதில் அவர்கள் கொண்டிருந்த ஈடுபாடு என்று அனைத்தையும் அழகான காட்சியமைப்பு மற்றும் வசனங்களின் வாயிலாக வெளிப்படுத்தியிருப்பார் மதிசுதா. குறும்படத்தின் ஒரு காட்சியில் தாத்தா, தனது பேரனுக்கு வேட்டைக்கு வேண்டிய துப்பாக்கிச் சூட்டைக் கற்றுக் கொடுக்கையில் அவர் பேசும் வசனம் அற்புதமாக இருக்கும். ஒட்டுமொத்த தமிழனத்துக்குமான செய்தி அது எனலாம்.

‘‘மூச்ச அடக்கி வெக்கணும் கேட் டியா, மூச்ச விட்டியண்டா இலக்கு மாறிப்போய்ரும் கேட்டியா?’’ என்று கதை நாயகன் கூறும் இடம் சிறப்பான காட்சியமைப்பின் சான்றாகும். ஒரு முறை மட்டுமே கண்டு கடந்துவிட முடியாத உணர்வுபூர்வமான படைப் புகளை வழங்கிவரும் மதிசுதாவின் வருங்காலத் திட்டங்கள் முழுநீளத் திரைப்படங்களை இயக்குவதாகும். அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகக் கூறும் அவர்,

‘‘ஒரு கதையை இயக்கவோ நடிக்கவோ தேர்வு செய்யும்போது அதை முதலில் துறைசார்ந்த நண்பர்களிடம் பகிர்வது முக்கியம். கதை வெளியாவதால் சிக்கல் ஒன்றுமில்லை. ஏனென்றால், ஒரே கதையை இரு வேறு நபர்கள் இயக்கும்போது முற்றிலும் வெவ்வேறு வடிவம் கொள்கின்றன. ஒரு கதை, கதையாக இருக்கும்போது ஒரு மாதிரியும், காட்சிகளாக உருமாறும்போது வேறு மாதிரியும் இருக்கும். அதனால் ஒரு கதையில் காட்சியமைப்பும் வசனங்களும் விளையாட இடமிருக்கிறதா என்று உறுதி செய்துகொண்ட பின்னரே கதையைத் தேர்வு செய்யவேண்டும்’’ என்று மதிசுதா கூறுகையில் அவரின் துறைசார்ந்த நிபுணத்துவம் விளங்குகிறது.


பத்தாண்டுகளுக்கு முன்பு கிடைத்த அங்கீகாரமும், அடையாளமும் இன்று பன்மடங்கு பெருகி, சமகால ரசிகர்களின் மத்தியில் ஈழப் படைப்புகள் பெரும் கவனம் பெற்று வருவதாக மகிழ்வுறும் மதிசுதா, ‘‘வில்லுப்பாட்டும் தெருக்கூத்தும் பழகிய எம்மக்களின் ரசனை எமக்கு தெரிந்தவையே. பொறுமையும் நிதானமும் மட்டும் படைப்பாளர்களுக்குத் தேவை.

பொலிவுட், கொலிவுட் என்று எவ்வளவுதான் ரசித்தாலும் மண்மணம் மாறாத படைப்புகளிடமே மனிதர்கள் தஞ்சமடைவர். அண்டை வீட்டானின் உணவை ருசிக்கலாம், போற்றலாம். ஆனால், ஒருபோதும் அது அம்மாவின் கைப்பக்குவத்துக்கு ஈடாகாதல்லவா?’’ என்று புன்னகையுடன் கூறுகிறார் மதிசுதா.

தனது குறும்படத்தின் தலைப்பும், தென்னிந்திய திரைப்படமொன்றின் தலைப்பும் ஒன்றாக இருந்ததால் கிளம்பிய சர்ச்சைகளையும் சிக்கல் களையும் ஒருவாறு சமாளித்து வெற்றி பெற்றுள்ள மதிசுதா, ‘‘சினிமா எங்களது ஆயுதம் மட்டு மல்ல, அது எங்களது உரிமையும்கூட. இலங்கையில் தமிழ்ப் படங்களுக்கு சரியான வரவேற்பில்லாத சூழலில், தென்னிந்திய திரைப்பட உலகின் ஒத்துழைப்பும் ஆதரவும் அவசியம் தேவை’’ என்று வலியுறுத்துகிறார்.

விகடன்

# மலையக இளைஞர்களின் 'சொல்லப்படாத கதை'




படைப்பு என்கிற போது மக்களின் புத்திக் கூர்மையிலிருந்து எழுகிறது. அது வெவ்வேறு கலை வெளிப்பாடுகள், அழகியல் மற்றும் வெளிப்பாட்டு நோக்கங்களுக்காக படைப்புகளின் முடிவிலியை உருவாக்கவும் கடத்தவும் மனிதனுக்கு உதவுகின்றன. இலக்கியம், நடனம், ஓவியம், சிற்பம் மற்றும் சினிமா என்பது ஒரு குறிப்பிட்ட தருணத்தில் ஒரு யதார்த்தத்திற்கு பதிலளிக்கும் தனித்துவமான படைப்புகளை உருவாக்க, மனிதர்கள் தாராளமாக உணரும் வழிமுறையாகும். ஆனால், இந்த 'TEA' பாடலின் வழியே சில நிமிடங்கள் சென்றாலும் அப்பனின் சிதை மேல் வாழ்ந்து கொண்டிருக்கும் நம்மை சுற்றி சுழல்கின்ற வஞ்சனை செயற்பாடுகளுக்கு எதிராக, நேரடியாகப் பரிவர்த்தனை செய்யும் வகையில் மக்களுக்கு ஆழமாக உணர்த்த வேண்டிய கருத்துகளையும் நமது தீவிரமான வாழ்க்கை மதிப்புகளையும் நமது கலாசார மதிப்புகளையும் போலி அரசியல் நிலைப்பாடுகளையும் உருவாக்கக்கூடிய, உருவாக்கிய சோதனைகளை இங்கே ஒரு காணொளியின் வழியாக மக்களுக்கு கொடுக்கும் முயற்சிகளாக மேற்கொள்ளப்பட்டு வெளிவந்திருக்கிறது இந்த 'TEA' (சொல்லப்படாத கதை) பாடல்.

இந்நாட்டிற்கு தொழிலுக்காக அழைத்து வரப்பட்ட கூலித் தொழிலாளர்களாக அமர்த்தப்பட்டு அடிமைகளாகத் திட்டமிட்டு ஒரு வாழ்வை வாழ வைத்து அதன் வழியாக 200 வருடங்களை எட்டியுள்ள மலையகத் தமிழர்களே தங்களின் வலியை உணர்ந்து நமது தேவையை நாமே தீர்மானிக்க வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கும் விதத்தில் இந்த 'TEA' காணொளியை உருவாக்கியுள்ளார்கள். நமக்கான தேவை இங்கே எப்போது, எவ்வாறு, யாரால், எந்த வடிவத்தினால் தீர்மானிக்கப்படவேண்டும் என்பதையும் ஆழமாக சொல்லிச் சென்றுள்ளனர். சமூக, அரசியல் காரணங்களாலும் தமது சொந்த அனுபவத்தின் வழியே தாம் தினம் தினம் அனுபவித்துக் கொண்டிருக்கும் பெரும் வலி காரணமாக போராட்ட மற்றும் புரட்சி மனநிலையை உருவாக்கி, கலகத் தன்மையை இங்கே உருவாக்க வேண்டும் என்ற எண்ணித்தை உருவாக்கியுள்ளார்கள் என்று எண்ணிக்கொள்ளலாம்.

சமூகசார் செயற்பாடு என்பது வெறும் வார்த்தையல்ல, அது உள்ளமும் உடலும் ஒத்துழைப்பதோடு மட்டுமல்லாது, அந்த சூழலோடு அனுதினமும் வாழ்வது. அந்த வகையில் இங்கே உடலாலும் உள்ளத்தாலும் வாழ்ந்து கொண்டும் அந்த சமூகத்தின் மாற்றத்திற்கு ஏதாவது தன்னால் ஆன விதையை விதைக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பது இளைஞர்களுக்கு உணர்த்தும் வகையில் 'TEA' காட்சிகள் காணொளிகளாக்கப்பட்டுள்ளன.

மனித வாழ்க்கையிலுள்ள அபத்தங்களை வெளிப்படுத்துதல், சமகாலப் பிரச்சினைகளை அலசுதல் மற்றும் ஆராய்தல், அரசியல் சமுதாய சீர்கேடுகளை எடுத்துக் காட்டுதல், தனி மனித உரிமைக்குக் குரல் கொடுத்தல், பழைய புராண நிகழ்வுகளில் சமகாலப் பிரச்சினையைக் காணல், இன்றைய வாழ்வின் துன்பங்கள், சிக்கல்கள் முதலானவற்றைப் புலப்படுத்துதல் என்பன இந்த 'Rap' பாடலின் அங்கமாக இருந்தாலும், அது மலையக சமூகத்தின் அவலங்களாக அடிப்படைகளாகின. ஒரு சில சந்தர்ப்பங்களில் குறியீடுகளாலும் உருவகமாகவும் தான் கூற வந்த கருத்துகளை தெளிவாக புலப்படுத்தியுள்ளார்கள்.

தமிழன் நிறுவனத்தின் தயாரிப்பில் இசை, கதை, இயக்கம் என்பன C.V.Laksh அவர்களினாலும், ராப் - C.V.Laksh, அருண்பிரகாஸ் எந்தோனி, அஞ்சலினா ஆகியோர் பாட, துணை இயக்குநராக ஜீவனும் கலை இயக்குநராக கணேந்திரனும் பணியாற்ற பிரதான பாத்திரங்களாக ரா.நவீன், த.ஹரி, கமலி, துஷா, ச.தினேஷ், சிவகாந்த மற்றும் நண்பர்கள் நடிப்பில் 'TEA' என்னும் பெயரில் தமிழன் தயாரிப்பு நிறுவனத்தின் யூடியூப் பக்கத்தில் வெளிவந்து அனைவர் மத்தியிலும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

**செ.திவாகரன்,**
**நானுஓயா.**

# நிர்ஷ்ரயா கஜனின் பரத நாட்டிய அரங்கேற்றம்

"இன்றைய தலைமுறையினருக்கும், இனிவரும் சந்ததிக்கும் நாட்டியத்தினூடாக நம் உயிர்த் தமிழின் இலக்கிய வெளிக்கான சிறு அறிமுகமேனும் வழங்கவேண்டும் என்பதே இப்படைப்பின் அடிப்படை. 'தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார் இங்கு அமரர் சிறப்பு கண்டார்' என்று தமிழ் போற்றிய பாரதியின் கொள்ளுப்பேரன் டொக்டர் ராஜ்குமார் பாரதி இப்படைப்பிற்கு இசையமைத்துச் சிறப்பித்துள்ளார். அவரது இயலூறிய இசைத்தேன் சுவையை சொல்லவல்லேன். இவ்வரங்கேற்றம் அகில மகிழ்வு தர, உள்ளம் நிறைந்து கரைக்கும் தமிழ்மொழியைச் சென்னிமேல் தாங்கி நிற்கும் தமிழ் விரும்பிகள் அனைவரதும் அன்பையும் ஆசிகளையும் வேண்டி நிற்கிறோம்" என 'மதங்கமொடு தமிழ் முழங்கவே' படைப்பை வடிவமைத்து நெறியாள்கை செய்து தயாரித்து வழங்கும் அபிநயஷேத்ரா நடனப்பள்ளி இயக்குனர் கலாசூரி திவ்யா சுஜேன் தெரிவித்தார்.

"பன்முகத் திறமைகளைக் கொண்ட சிறந்த நடன அமைப்பாளர், பயிற்றுவிப்பாளர், கடின உழைப்பும் தேடலும் நிறைந்த ஆடல் கலைஞர், ஒவ்வொரு மாணவருக்குள்ளும் இருக்கும் திறமையை கண்டுணர்ந்து வெளிக்கொணரும் ஆசிரியர் என வியந்து பார்க்கும் குரு அமைந்தமை எனது முதல் பாக்கியம். நாட்டியம் ஆத்மாவில் இருந்து பிறக்கிறது என்று உணர்த்திய என் குருவின் அயராத கற்பித்தலுக்கும் உதவிக்கும் நன்றி சொல்லிப் போதாது. ராஜ்குமார் பாரதி ஐயாவின் இசை நுணுக்கங்களையும் தமிழில் நிறைந்துள்ள ஏராளமான விடயங்களையும் ஒவ்வொன்றாக என் குரு சொல்லித்தர எப்போது என்னுள் இசை ஆர்வமும் தமிழ் பக்தியும் வந்தது என்றே தெரியாமல் முத்தமிழையும் அனுபவிக்கத் தொடங்கினேன். இதுதான் அபிநயஷேத்ராவின் கற்பித்தல் தனிச்சிறப்பு என்று இப்போது புரிகிறது. இவ்வரங்கேற்றதைச் சிறப்புவிக்கும் இந்திய கலைஞர்களுக்கும் அனைத்தையும் ஏற்பாடு செய்து வழங்கும் எனது பெற்றோருக்கும் பல கோடி நன்றிகள்" என 13 வயது நிரம்பிய அரங்கேறும் மங்கை நிர்ஷ்ரயா கஜன் தெரிவித்தார்.



இவர் நடனம் மட்டுமின்றி கேட்வே சர்வதேச பாடசாலையில் கல்வியிலும் சிறந்து விளங்குவதோடு, ஆங்கில உரையாற்றல், ஓவியம், இயந்திரவியல், செயற்கை நுண்ணறிவு , தடகள விளையாட்டுகள் போன்றவற்றிலும் ஆர்வத்துடன் பங்குபற்றி வருகிறார்.

***எதிர்வரும் 25.02.2023 அன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.***

'மதங்க மொடு தமிழ் முழங்கவே' அரங்கேற்ற நிகழ்விற்கு இசைமேதை டொக்டர் ராஜ்குமார் பாரதி ஐயா கலந்துகொண்டு சிறப்பிப்பதுடன், இந்திய அணிசேர், அரங்கிணைவு கலைஞர்களும் உரையாசிரியர் புலியூர் கேசிகன், புதல்வி கவிஞர் கலைச்செல்வி, பேராசிரியர் சி.மௌன குரு மற்றும் பல முத்தமிழ் அறிஞர்களும் கேட்வே சர்வதேச பாடசாலைத் தலைவர், அதிபர் எனப்பல கலை ஆர்வலர்களும் சிறப்பு அதிதிகளாகப் பிரதம விருந்தினராக பங்குபெறவுள்ளனர்.

**சுவாதி**

# வகவ கவியரங்கமும் நூல் வெளியீட்டு நிகழ்வும்














மாதந்தோறும் பௌர்ணமி தினங்களில் கவியரங்கை நடத்திவரும் வலம்புரி கவிதா வட்டம் (வகவம்) பெப்ரவரி மாதத்திற்கான கவியரங்கை கடந்த 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பௌர்ணமியன்று நடத்தியது.

கத்தார் நாட்டிலிருந்து தனது தாய் மண்ணுக்கு வருகை தந்திருந்த பிரபல கவிஞர் மெய்யன் நடராஜ் கவியரங்கிற்கு தலைமை தாங்கினார்.

இந்நிகழ்வின் போது அவர் எழுதிய ‘மூச்சுவிடும் காதுகள்’ கவிதை நூலையும் வகவம் வெளியிட்டு வைத்தது. வகவம் சார்பாக சத்திய எழுத்தாளர் எஸ்.ஐ.நாகூர் கனி இந்நூலை வெளியிட்டு வைத்தார். கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வை வகவத் தலைவர் என்.நஜ்முல் ஹுசைன் நெறிப்படுத்தினார். சத்திய எழுத்தாளர் எஸ்.ஐ.நாகூர் கனி முன்னிலை வகித்தார். செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் வரவேற்புரையும் பொருளாளர் ஈழ கணேஷ் நன்றியுரையும் வழங்கினர். அண்மையில் எம்மை விட்டும் மறைந்த கவிஞர் பிரேம்ராஜின் தாயார், சத்திய எழுத்தாளர் எஸ்.ஐ.நாகூர் கனியின் மனைவியின் தாயார் ஆகியோரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

கவிஞர் மெய்யன் நடராஜ் தலைமை தாங்கி நடத்திய கவியரங்கில் கவிஞர்கள் வதிரி சி. ரவீந்திரன், கலைவாதி கலீல், வாசுகி பி.வாசு, முஹம்மத் சஜ்ஜாத், கவிஞர் திலகம் பிரேம்ராஜ், ரஷீத் எம். றியாழ், ஆர். தங்கமணி கணேஷ், ப. தங்கவேல், தாமரைச்செல்வி, கிண்ணியா அமீர் அலி, பவானி கவிதை பாடினர். சச்சிதானந்தன், வெலிமடை ஜஹாங்கீர், ராஜா நித்திலன், சிந்தனைப் பிரியன் முஸம்மில், கவிநேசன் நவாஸ், எஸ்.தனபாலன் ஆகியோர் கவிதை பாடினர்.

**ஹுசைன்**

# மருதமுனை ‘சமாதான நீதிபதிகள்’ நூல் வெளியீடும் கௌரவிப்பும்







**(மருதமுனை நிருபர்)**

மருதமுனை ஆவணக் காப்பகத்தின் வெளியீடாக ஊடகவியலாளர் மருதமுனை றாசிக் நபாயிஸ் எழுதிய மருதமுனை ‘சமாதான நீதிபதிகள்’ நூல் வெளியீடு கடந்த (28-01-2023) சனிக்கிழமை மருதமுனை கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் ஏ.பீ.எம். மரைக்கார் நினைவரங்கில் நடைபெற்றது. கல்முனை வடக்கு முஸ்லிம் சமாதான நீதிபதிகள் சங்கத்தின் தலைவரும் ஓய்வுநிலை வருமான வரி மதிப்பீட்டாளரும் பிரசித்த நொத்தாரிஸுமான சமாதான நீதிபதி ஏ.எல்.எம்.முனாஸ் தலைமையில் இந்த விழா நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்ப்பாணம், வட மாகாணத்திற்கான குடியியல், மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி தாவூத்லெப்பை அப்துல் மனாப் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், சிறப்பு, கௌரவ அதிதிகளும் கலந்துகொண்டனர்.

இங்கு நூலாசிரியரும் ஊடகவியலாளருமான மருதமுனை றாசிக் நபாயிஸ் ஆற்றிவரும் சமூகப்பணி மற்றும் ஊடகப்பணியை கௌரவித்து மருதமுனை 4ஜி ஹேன்லூம் பிரைவட் லிமிட்டட் முகாமைத்துவப் பணிப்பாளர் பத்றுஸ் மான் பஹத்ஸமான் அதிதிகளோடு இணைந்து 4ஜி ஹேன்லூம் விருது வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். அத்துடன் நிகழ்வில் கலந்துகொண்ட அதிதிகள் நூல்களை பலருக்கும் வழங்கி கௌரவித்தனர்.



# ‘தொடுவானம்’ இசை வெளியீடு

‘ஆரோக்கியமான சமுதாயம்’ வழங்கிய ‘தொடுவானம்’ பாடலானது சக்தி தொலைக்காட்சியின் Shakthi chat நிகழ்ச்சியினூடாக அண்மையில் பிரத்தியேகமாக வெளியிடப்பட்டது.

இந்தப் பாடல் தருமராஜா துவாரகனின் இசையில் சுந்தரராஜன் டினுஷா காயத்திரியின் வரிகளில் உருவாகியுள்ளது.

இப்பாடலுக்கு அப்ரா லதீப், சிவதாசன் சினேகா மற்றும் அறிமுகப் பாடகர்களான ஜோசப் பெனடிக்ட், அன்டனி ஜெரிசன் ஆகியோர் குரல் கொடுத்துள்ளனர்.

ஒலிக்கலவை - டிலான் பெரேரா (Next Generation Music Studio)
தயாரிப்பு - ஆரோக்கியமான சமுதாயம் (Healthier Society)
ஒளிப்பதிவு மற்றும் படத்தொகுப்பு - லக்ஷ்மணன் கபிலேஷ்



# ‘ஓசை’ மூலமாகவும் பேசப்படும் மூத்த இலக்கிய ஆளுமை மூதூர் முகைதீன்

ஈழத்து நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியில் திருகோணமலை மாவட்டத்தின் மூதூர்ப் பிரதேச கலை இலக்கியவாதிகளின் பங்களிப்பு குறிப்பிட்டுக் கூறக்கூடியதாகும். மூதூரின் முன்னணி எழுத்தாளர் வ.அ.இராசரத்தினம் ஈழத்து நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவராகக் கணிப்புப் பெற்றிருப்பவர். அவரைப் பின் தொடர்ந்து, ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் நாவல், சிறுகதை, கவிதை என்ற படைப்புகளினூடாகப் பங்களிப்பு செய்து, மூதூர் மண்ணுக்குப் பெருமை சேர்த்தவர்கள் பலர். அவர்களில் ஒருவராக, மூதூரின் நாமத்தை உலகறியச் செய்தவராக மதிப்புப் பெற்றிருப்பவர் மூதூர் முகைதீன். ஊரின் பெயரைத் தன் இயற்பெயரோடு சேர்த்துக் கொண்டு, இலக்கிய உலகில் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் மற்றும் மெல்லிசைப் பாடல்கள் மூலம் பெயர் பதித்து வருபவர்.

மக்கள் கலைஞராக, மானிடநேசராக தனது படைப்புகளைத் தருபவர் அவர் என்பதை அவரின் படைப்புகள் பறைசாற்றும். வாழ்வியல் பிரச்சினைகளை, முரண்பாடுகளைப் பாமரரும் புரிந்து கொள்ளும் மொழியில் தரும் படைப்பாளியாக அடையாளம் பெற்றிருப்பவர். போர்ச்சூழல், கொரோனா, இனவாத அரசியல், அறியாமை பற்றியெல்லாம் அவருடைய சிருஷ்டிகள் பேசும். கற்பனை உலகில் அதிகம் சஞ்சரிக்காத, யதார்த்த இலக்கியவாதியாக அடையாளம் பெற்றிருப்பவர் அவர்.



‘தினபதி’ நாளிதழின் தினம் ஒரு சிறுகதைத் திட்டம் வழங்கிய வாய்ப்பில் 1970இல் ‘தியாகிகள் வரிசையில்’ என்ற சிறுகதை மூலம் இலக்கிய உலகிற்கு வந்தவர் மூதூர் முகைதீன். ஆயினும், பிற்காலத்தில் கவிதையே அவரை அதிகம் அரவணைத்துக் கொண்டது. மரபுக்கவிதை, புதுக்கவிதை, பாடல்கள் என்று அவரின் படைப்புகள் விரிந்தன.

பொருள் வடிவம், வெளிப்பாட்டு முறை என்பவற்றால் உயர்ந்து நிற்பவை அவரின் கவிதைகள்.

***‘‘சித்தாற்றி லிருக்கின்ற சிறாஜுத் தீனும்***
***சிரிபாலா மாமாவும் சேர்ந்து ஒன்றாய்***
***புத்தாண்டாம் சித்திரையில் புதிதாய்ச் செய்த***
***பொங்கலினைப் புசிப்பதற்கு வந்தால் எங்கள்***
***புத்திரர்க்குப் புத்தாடை பரிசாய்த் தந்து***
***புன்னகையில் விடைபெறுவார் யாவும் இன்று***
***சித்திரமாய் நெஞ்சினிலே நிலைத்த காட்சி***
***சத்தியமாய் நம்பிடுவீர் நானோர் சாட்சி’’***
***(இழந்துவிட்ட இன்பங்கள் - 2003)***

***‘‘நோன்புக் கஞ்சியை***
***விரும்பிச் சுவைத்திட***
***மாலைப் பொழுதில்***
***வீட்டுக்கு வந்து***
***உரிமையுடன்***
***உம்மாவிடம் கேட்டு வாங்கி***
***உறிஞ்சிக் குடிக்கும் விஜயன், விமலன்..***
***நட்பு மலர்கள்***
***தினமும் மணக்கும்***
***பிள்ளையார் கோவிலில்***
***சிவராத்திரிக்கு***
***சின்னராசாவின் பக்கத்தில் அன்வர் இருந்து***
***மோதகம் உண்பான்***
***ஐயா வந்து***
***சிரித்தபடியே***
***அவித்த கடலையையும்***
***அள்ளிக் கொடுப்பார்’’***
***(பிட்டும் தேங்காய்ப்பூவும் -1997)***

***அடிபட்டும் வெடிபட்டும்***
***அழிகின்ற உடல்விட்டு***
***வழிந்தோடும் குருதியினால்***
***அருவிகளும் சிவந்ததுவோ?***
***உவர்க்கின்ற கடல் நீராய்***
***உதிக்கின்ற கண்ணீரும்***
***உருண்டோடி ஒரு கடலாய்***
***உருவாகி வருகிறதே!***
***(இழந்துவிட்ட இன்பங்கள் - 2003)***

என்று இன சௌஜன்யம், யுத்த அவலம் என்பன குறித்தும் அவர் பாடிய கவிதைகள் அவரின் கவிதை விலாசத்தின் எடுத்துக்காட்டாகத் திகழ்வன. ஐம்பது வருடங்களுக்கும் மேலான இலக்கிய அனுபவத்தில், பத்து நூல்களை அவர் நமக்குத் தந்துள்ளார்.

முத்து (1976) கவிதை,
பிட்டும் தேங்காய்ப்பூவும் (1997) கவிதை,
இழந்துவிட்ட இன்பங்கள் (2003) கவிதை,
ஆசிரியர் பணியை அழகுறச் செய்வோம் (2005) கவிதை,
ஒரு காலம் இருந்தது (2010) கவிதை,
அபோதம் (2016) உருவகக் கதை,
ஒரு வானில் இரு நிலவுகள் (2017) கவிதை,
கனாக் கண்டேன் (2019) மெல்லிசைப் பாடல்,
சங்கமம் (2021) கவிதைத் தொகுப்பு,
கடலோரப் பாதை (2021) சிறுகதை என்பன அவரின் நூல்களாகும்.



இவை தவிர மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தினூடாக ‘ஓசை’ என்ற கவிதை இதழை வெளியிட்டு இளம் கவிஞர்களுக்குக் களம் அமைத்தவர் அவர். காலாண்டிதழாக (2005 - 2015) வெளிவந்த இச்சஞ்சிகை 28 இதழ்களை விரித்தது. ‘ஓசை’ இதழில் 100 கவிஞர்களின் 100 கவிதைகளைத் தொகுத்து (சங்கமம் 2021) நூல் வெளியிட்டதன் மூலம் இலக்கிய உலகுக்கு புதிய, ஆரோக்கியமான கவிஞர்களை அறிமுகப்படுத்திய பணியையும் செய்திருப்பவர் மூதூர் முகைதீன்.

மாவலி மைந்தன், தொன்மையூர்க் கவிராயர் என்ற புனைபெயர்களிலும் எழுதியிருக்கும் மூதூர் முகைதீன் விருதுகளையும் பரிசுகளையும் இலக்கியப் பணிக்காகப் பெற்றிருப்பவர். மல்லிகை (2011 நவம்பர் ) இவரை அட்டைப்பட அதிதியாக கௌரவித்தது.

கலாபூஷணம் விருது (2007),
தேசகீர்த்தி விருது (2008),
சாமஸ்ரீ காவியஜோதி விருது (2008),
கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது (2011),
காவிய சுவர்ண விருது (2012)
என்பன அவர் பெற்ற விருதுகளில் சில.

கல்விப் பணிக்காக 2006இல் தேசிய சமாதானப் பேரவை, ‘வித்தியா கீர்த்தி’ விருது வழங்கி அவரைக் கௌரவித்தது.

1991இல் ஈரான் தூதுவராலயம் நடத்திய கட்டுரைப் போட்டியில் சிறப்புப் பரிசு.

1992இல் தேசிய மீலாத் விழாக் கவிதைப் போட்டியில் முதற்பரிசு.

1996இல் ‘விபவி’ சுதந்திர இலக்கிய விழா கவிதைப் போட்டியில் முதற்பரிசு.

1996இல் வடக்கு - கிழக்கு மாகாண கவிதைப் போட்டியில் முதற்பரிசு.

1997இல் ‘அகதி’ சஞ்சிகை நடத்திய கவிதைப் போட்டியில் முதற்பரிசு.

1998இல் பேராதனைப் பல்கலைக்கழக சங்கீத நாட்டிய சங்கம் நடத்திய கவிதைப் போட்டியில் முதற்பரிசு.

1999இல் வெரிடாஸ் வானொலி நடத்திய கவிதைப் போட்டியில் (புதிய உலகம்) முதற்பரிசு.

2002இல் அஷ்ரப் ஞாபகார்த்த கவிதைப் போட்டியில் முதற்பரிசு.

2005இல் கலாசார அமைச்சு நடத்திய அரச ஊழியர்களுக்கான கவிதைப் போட்டியில் முதற்பரிசு.

இவ்வாறு தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டுக்கும் குறைந்தது ஒரு முதற்பரிசு அல்லது ஒரு சிறப்புப் பரிசை 2013 வரை தொடர்ந்து பெற்று வந்திருப்பவர் அவர்.



மூதூரில் 1951இல் அபுசாலிஹு - றாவியா உம்மா தம்பதியின் மகனாகப் பிறந்தவர் முகைதீன். ஆரம்பக் கல்வியை மூதூர் மத்திய மகா வித்தியாலயத்திலும் உயர்தரக் கல்வியை திருகோணமலை இந்துக் கல்லூரியிலும் கற்றவர். பலாலி ஆசிரியர் கல்லூரியில் கணித ஆசிரியராகப் பயிற்சி பெற்றவர். மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில், பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா கற்றுத் தேர்ந்தவர். ஆசிரியராக, அதிபராக 40 வருடங்கள் கல்விப் பணிபுரிந்து 2011இல் ஓய்வுபெற்றவர்.

மூதூர்ப் பிரதேசத்தின் மூத்த இலக்கிய ஆளுமையாகவும் நல்லாசானாகவும் மதிப்புப் பெற்றிருக்கும் மூதூர் முகைதீன் இன்னும் பல்லாண்டு காலம் வாழவேண்டும். அவரின் இலக்கியச் செயற்பாடுகள் மேலும் தொடரவேண்டும் என்பதே நமது அவாவாகும்.

**பாவேந்தல் பாலமுனை பாறூக்**



**க**லைவாணி எனும் இயற்பெயர் கொண்ட தமிழ் சினிமாவின் பிரபல பின்னணிப் பாடகியான வாணி ஜெயராம் (வயது 78) 1945 நவம்பர் 30ஆம் திகதி பிறந்தவர். இந்தியாவின் ஹைதராபாத்தை வசிப்பிடமாகக் கொண்டவர். தனித்துவமான பின்னணிப் பாடகியான இவர் தமிழ், தெலுங்கு, கன்னடம் உட்பட 19 மொழிகளில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை இதுவரை பாடியவர். இவர் கடந்த 1974ஆம் ஆண்டு வெளியான 'தீர்க்க சுமங்கலி' என்ற படத்தின் மூலம் திரையுலகிற்கு பாடகியாக அறிமுகமானார். பல விருதுகளுக்கும் பல்லாயிரக்கணக்கான ரசிகர்களுக்கும் சொந்தக்காரரான இவருக்கு அண்மையில் இந்திய அரசாங்கத்தினால் பத்மபூஷண் விருதும் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், சென்னையிலுள்ள தனது வீட்டில் தவறி விழுந்து உயிரிழந்தார்.



# "ஏபிசி நீ வாசி எல்லாம் என் கைராசி ஸோ ஈசி..."

"எது சுகம் சுகம் அது, வேண்டும் வேண்டும்" என்று அந்தப்பாட்டு ஆரம்பிக்கும். வழமைபோல கொஞ்சம் உயர் சுருதிதான். இந்தப்பாட்டு இங்கே ஆரம்பித்தால் எங்கே போய் முடியுமோ என்று நமக்கெல்லாம் கவலை வரலாம். "கூடும் நேரம், யுகங்கள் கணங்கள் ஆகும், நீங்கும் நேரம் சில கணங்கள் யுகங்கள் ஆகும்" என்று மேலே போய் "வா வா மீண்டும் மீண்டும் தாலாட்டு" என்று பல்லவியே முதல் மாடிக்குச் சென்றுதான் ஓயும். ஆனால், ஏ.ஆர்.ரஹ்மான் பல்லவியில் செய்தது போதாது என்று சரணத்தைத் தூக்கி அடுத்த மாடியில் ஏற்றி விட்டிருப்பார். "சாம வேதம் நீ ஓது, வாடைத்தீயைத் தூவும்போது" என்று சொல்லி கூரையில் ஏறிவிட்டு, இதற்குமேலே போனால் பேதம் என்று "வா இனி தாங்காது தாங்காது, கண்ணோரம் இந்நேரம் செந்தூரம் உண்டாக" என்று ரஹ்மான் மீண்டும் பாட்டைக்கொண்டுவந்து பல்லவியில் இணைத்துவிடுவார்.

இந்தக் கொம்பசிஷனை அதிகம் பேஸ் உள்ள ஒரு பாடகி பாடமுடியாது. சித்ராவினுடையது போன்ற மென்மையான குரல் வேண்டும். ஆனால், ஹை பிட்ச்சில் குரல் கம்பி மாதிரி நிற்க வேண்டும். அதற்கு இரண்டு பேர் இருக்கிறார்கள். ஒருவர் சுவர்ணலதா. மற்றவர் வாணி ஜெயராம்.

வாணி ஜெயராம் பாடிய பாடல்களை இலகுவில் மேடைகளில் பாடிவிடமுடியாது. "காதலின் பல்லவியோ, அதில் நான் அனுபல்லவியோ" எனும்போது அந்த "யோ"வில் கம்மென்று பிடித்துக் கொண்டு நிற்க வேண்டும். அவ்வளவு மென்மையான குரலை வைத்துக்கொண்டு அந்தப் பிட்ச்சில் அந்த நோட்டில் கொஞ்சமும் கீச்சிடாமல் இயல்பாகப் பாடுவதென்பது கடினம். அந்த ரிஸ்க்கை தயவுசெய்து 'வாணி அம்மா டிரிப்யூட்' என்று சொல்லி யாரேனும் பாடித்தொலைத்து விடாதீர்கள். அப்படியே பாடினாலும் பதிவுசெய்து வெளியிட்டு எங்களுக்கு அரளி விதையை அரைத்துத் தந்துவிடாதீர்கள். ப்ளீஸ். ஒரு பாடகரின் பெருமையே அவருடைய குரல்தான். பின்னர் அவருக்கு 'டிரிப்யூட்' என்று அவர் குரலை விடுத்து உங்கள் குரலில் ஒன்றைப் பாடி வைப்பதில் என்ன பெருமை வந்துவிடப்போகிறது? அவர் பாடல்களைத் தொடர்ந்து கேட்பதும் அவற்றின் நுணுக்கங்களைப் பேசுவதுமே உண்மையான 'டிரிப்யூட்' ஆக அமையும்.

இப்போது யோசித்தால் வாணி ஜெயராமின் பெரும் பாலான பாடல்கள் உயர் சுருதியிலேயே அமைந்திருக்கின்றன. உயர் சுருதி வசப்பட்ட பாடகிகளே வேறு இல்லையா என்று கேட்கலாம். இருக்கிறார்கள். சுசீலா, ஜானகி முதற்கொண்டு நித்யஸ்ரீவரை உயர் ஸ்தாயியை ஆட்கொள்ளக்கூடிய பாடகிகள் ஏராளம். ஆனால், அவர்கள் எல்லோருக்கும் குரலின் ஆதார ஸ்தாயி வலுவானது. அதனால் அவர்கள் செவ்வாய்க்கிரகம் வரை சென்று திரும்புவார்கள். நமக்கும் அது தோன்றாது. ஆனால், வாணியின் குரலின் ஆதாரம் மிக மென்மையானது. சித்ரா, மின்மினி, ஜென்சி போன்ற பாடகிகளின் குரல்களை ஒத்தது அது. ''தமிழ் வந்த திசை பார்த்து உயிர் கசிந்தேன்... அஞ்சலி அஞ்சலி இவள் கலைக் காதலி'' என்று சித்ரா உச்சம் போகும்போது 'கரணம் தப்பினால் மரணம்' என்ற டென்ஷன் எமக்கும் இருக்குமல்லவா? அதற்குக் காரணம் அவரின் குரலமைப்பே அப்படித்தான். அப்படியொரு குரலை வைத்துக்கொண்டு வாணி ஜெயராம் "வான் மேகங்கள், வெள்ளி ஊஞ்சல்போல்" என்று பாடுவது மட்டுமின்றி, ஊஞ்சலில் ஒரு சங்கதிவேறு போடுவார். அதுதான் அவருடைய சிறப்பு.



"அந்தமானைப் பாருங்கள் அழகு" பாடலின் சரணம் அப்படிப்பட்டது. "நடமாடும் கலைக்கூடம்" என்று ''சப்தஸ்வரம் புன்னகையில் கண்டேன்'' பாடலில் பாடுவதாகட்டும். "பாடும் பறவைகள் வாருங்கள், புலி வீரன் திலீபனைப் பாடுங்கள்" பாடலில் "ஆயிரம் ஆயிரம் ஆயிரம்" என்பதாகட்டும். எல்லாவற்றிலும் இந்த விடயத்தை நாம் கவனிக்க முடியும். இதற்குத் தகுந்த மாதிரி இளையராஜா ஓர் அற்புதமான தனிப் பாடலை இவருக்குப் பாடக்கொடுத்தார். அதுதான் "கவிதை கேளுங்கள்" பாடல். மீண்டும் ஒருமுறை அப்பாடலைக் கேட்டுப்பாருங்கள். பல்லவியில் சாதாரணமாகத் தொடங்கும் பாடல் சரணத்தில் அடுத்த கியரை மாற்றிவிடும். "நேற்று என் பாட்டு சுருதியும் விலகியதே" என்று ஆரம்பித்து சரணம் முடித்து பல்லவி தொடங்கும்போது chords மாறிவிடும். அது இளையராஜா! அப்படியொரு பாட்டுக்கான சூழல். அதற்கமைய கொம்பசிஷன். அதன் ஆழத்தைப் புரிந்து பாடக்கூடிய திறமையுள்ள பாடகி. வேறென்ன பாட்டுக்கு வேண்டும்?

இப்போது வாணி ஜெயராம் பாடாத, ஆனால், அவர் குரலில் நன்றாக வந்திருக்கக் கூடிய வேறு பாடல்களை யோசித்துப் பார்க்கிறேன். உடனே ஞாபகத்துக்கு வருவது "அழகு மலராட" பாடல்தான். இவர் குரலுக்கு அது நன்றாகவே பொருந்திப் போயிருக்கும் (ஜானகி அற்புதமாகப் பாடினார் என்பது வேறு, ராஜா பாட்டில்லையா!). "மலர்களே மலர்களே" கூட வாணி அற்புதமாகப் பாடியிருப்பார். "உருகியதே எனதுள்ளம், பெருகியதே விழி வெள்ளம்" எனும்போது அந்தக்குரல் அப்படியே தேன்போல வழிந்திருக்கும் . இளையராஜாவின் பல பாடல்களை வாணி ஜெயராம் பாடியிருக்கிறார். அதில் ஜேசுதாஸோடு இணைந்து வாணி பாடிய ஒரு கைதியின் டைரி திரைப்படப் பாடல் மிகக் கவர்ந்த ஒன்று. சொல்லவே வேண்டாம். "என் பாடம் நான் சொல்ல, பெண் பாடம் நான் சொல்ல, வா மெல்ல மெல்ல மெல்ல" என்று சரணத்தில் இருவருமே நெருப்பு எடுப்பார்கள். அற்புதமான கொம்பசிஷன். அதிலே வாணி ஜெயராம் பாடும் வரிகள்தான் அவர் குரலுக்கும் பொருந்தும்.

"ஏபிசி நீ வாசி எல்லாம் என் கைராசி ஸோ ஈசி..."

**ஜே.சந்திரசேகரம்**

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7